கவிதை

# குப்பை மேட்டிலிருந்து இலையான் விரட்டும் சொறிநாய் பற்றிய சித்திரம்

**துவாரகன்**

கழிவுகள் கொட்டும் குப்பை மேட்டில்
குடியிருக்கிறது சொறிநாய் ஒன்று.

அழகிய அருவருப்பான
சக்குமணம் விரட்டும்
குப்பை மேட்டில்
கண்ணில் பீழை வழிய
பிய்ந்து தொங்கும் புண்களில்
இலையான்கள் மொய்க்க
குடியிருக்கிறது சொறிநாய் ஒன்று.

பச்சைப்புல் படர்ந்த
மழை நீரோடி அழகாக்கிய மண்ணில்
அழகான சடைத்த குட்டியாய்
வாலாட்டி
வளைந்து நெளிந்து
வருபவர் முகம் பார்த்து
பல கதைகள் கூறிய
அழகான நாட்கள்
அதன் இறந்த காலமானது.

காலம் விரட்ட
கதிகலங்கி ஓடியோடி
வாழ்வின் எல்லையாகிப் போன
விரட்டலின் ஓரமாகிப்போன
இந்தக் குப்பை மேட்டில்
தவமிருக்கிறது.

என்றாவது ஒருநாள்
இந்தக் குப்பை கொட்டல்
இல்லாதுபோனால்
அதற்கு இளமுயிர்ப்புப் பெறும்
நம்பிக்கை தானும் உள்ளதோ
யாருக்குத் தெரியும்

எலும்புகள் வெளித்தெரிய
நடக்க முடியாத பலவீனத்தோடு
விரட்டலின் ஓரத்தில்
இன்னமும் தவமிருக்கிறது சொறிநாய்.

இலையான் விரட்டும் ஒரு செயல் தவிர
அதனால் வேறு எதுதான் இயலுமோ

06032007I056